25.09.2024.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.20/2019

அ.சா.14

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாவாஜான் | | |
| த/பெ | சேக்குரூ | | |
| கிராமம் | டி.எடைப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணைய்நல்லூர் | வயது | 70/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது வயதின் மூப்பின் காரணமாக வீட்டிலிருந்து வருகிறேன். 27.06.2018ந் தேதி காலை சுமார் 6 மணியளவில் குன்னத்தூர் டீ கடைக்கு நானும், அலாவுதீன் என்பவரும் நடந்து சென்றோம். எடைப்பாளையத்தில் காலனி பக்கத்தில் உள்ள கோயில் அருகில் நான் எடைப்பாளையத்தை சேர்ந்த மோகன், முஸ்தபா ஆகியோரையும் மற்றொரு நபரையும் பார்த்தேன். அவரது பெயர் தெரியவில்லை. முதலில் இருக்கும் மோகனையும், முஸ்தபா என்பவரையும் சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அந்த பெயர் தெரியாத நபரும் இங்கு இருக்கிறார். அன்றைய தினமே மாலை எங்கள் ஊர் போலீஸ்காரர் என்ற அப்துல்ஜபார் கொலை செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டோம். அவர் நிலத்தில் உள்ள வீட்டில் அவரது பிரேதத்தை தூரம் நின்று பார்த்தேன். இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்தனர்.

**1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**<u>5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முஸ்தபா என்பவரை எனக்கு தெரியும். அவருக்கும் இறந்துபோனவருக்கும் எந்தவிதமான முன்விரோதமும் இல்லை. மோகன் என்பவர் முஸ்தபா என்பவரிடம் பணியாளராக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அன்று முஸ்தபா யார் யாரிடம் பேசினார் எங்கு நின்றார் என்பது எனக்கு தெரியாது. அப்தூல்ஜபார் இறந்து சுமார் 20 நாட்கள் கழித்து என்னை காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். நான் அவர் இறந்தபோது அன்று இரவு 7 .10 மணிக்கு அங்கு சென்று பார்த்தேன். காவல் துறையினர் அங்கு இரவு 9.30 மணிக்கு வந்ததாக நான் கேள்விப்பட்டேன். போலீசாரிடம் நான் 5ம் எதிரியை பார்த்ததாக சொல்லவில்லை. போலீசார் என்னிடம் அடையாள அணிவகுப்பு நடத்தி இவர்களில் யார் என்று கேட்கவில்லை. எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

**மறுவிசாரணை**

**இல்லை.**